Bildung, Kultur und Sport

# தமிழ்க் கல்விக் கழகம் - யேர்மனி

தமிழாலயங்களின் கல்வி,கலை,விளையாட்டு ஒருங்கிணைப்பு நடுவம்

Tamilische Bildungsvereinigung e.V.

Bessemerstrasse 7/c
70435 Stuttgart

Tel: +49 (0)7118709767
Fax: +49(0)7118709769
info@tbvgermany.com
**www.tbvgermany.com**
Steuernummer: 99018/55410

Vereinssitz Stuttgart
Reg: VR 6607
Amtsgericht Stuttgart

Tamilische Bildungsvereinigung e.V. Bessemerstr 7/c 70435 Stuttgart

ஸ்ருற்காட் 30.10.2024
சுற்றறிக்கை 08-2024
நடுவச் செயலகம்

மதிப்புக்குரிய தமிழாலய நிர்வாகி மற்றும் கலைப்பிரிவுச் செயற்பாட்டாளர் அவர்களுக்கு,
அன்புடையீர்!

## கலைத்திறன் போட்டி 2025

யேர்மனியில் தமிழ்க் கல்விக் கழகத்தின் நிர்வாகக் கட்டமைப்பின் கீழ் இயங்கும் தமிழாலயங்களிற் பயிலும் மாணவர்களின் கலைத்திறனை மேம்படுத்தும் நோக்கில் 2025ஆம் ஆண்டிற்கான கலைத்திறன் போட்டி தமிழாலயங்களிடையே நடாத்தப்படவுள்ளது. கலைத்திறன் போட்டி நடைபெறும் நாள்கள்:

01.02.2025 வடமத்திய மாநிலம்
08.02.2025 மத்திய மாநிலம்
15.02.2025 வடமாநிலம்
22.02.2025 தென்மேற்கு மாநிலம்
01.03.2025 தென்மாநிலம்

கலைத்திறன் போட்டி தமிழாலயங்களிற் பயிலும் அனைத்து மாணவர்களையும் உள்ளடக்கியதாக நடாத்தப்படும். இப்போட்டியிற் பங்குபற்றும் அனைத்துப் போட்டியாளர்களுக்கும் பங்கேற்புக்கான மதிப்பளிப்பும், முதல் மூன்று நிலைகளைப்பெறும் வெற்றியாளர்களுக்கான மதிப்பளிப்பும் போட்டி நடைபெறும் அரங்கிலேயே வழங்கப்படும். போட்டிகளிலே பங்குபற்றிப் பெறும் புள்ளிகளின் அடிப்படையில் மாநில மட்டத்திலும் யேர்மனி தழுவிய மட்டத்திலும் முதல் மூன்று நிலைகளைப்பெறும் தமிழாலயங்களுக்கு எமது 35ஆவது அகவை நிறைவு விழா அரங்குகளில் சிறப்பு மதிப்பளிப்பு வழங்கப்படும்.

**கலைத்திறன் போட்டிக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ள போட்டிகளின் தொகுப்பு:**

**குழுநிலைப் போட்டிகள்:**

1. மயிலாட்டம்
2. காவடியாட்டம்
3. புலியாட்டம்
4. காவடி, கரகம், பொய்க்காற் குதிரை
5. பரதநாட்டியம் - இரண்டு பிரிவுகள் (நாம் வழங்கும் ஓர் உருப்படிக்கு ஆடவேண்டும்.)
6. விடுதலை நடனம் - இரண்டு பிரிவுகள்
7. வில்லுப்பாட்டு

**தனியொருவருக்கான போட்டிகள்:**

8. வாய்ப்பாட்டு - மூன்று பிரிவுகள்
9. விடுதலைப் பாடல் - மூன்று பிரிவுகள்

**பொதுவான கலைத்திறன் போட்டி விதிகள்:**

- விண்ணப்ப நிறைவு நாள்: **15.12.2024**
- தமிழாலயங்களில் தமிழ்மொழி பயிலும் மாணவர்களும் தமிழாலய நேரடி நிர்வாகத்தின் கீழ் இயங்கும் நுண்கலை வகுப்பு மாணவர்களும் மற்றும் பாரதி கலைக்கூட நுண்கலை வகுப்புகளிற் கலை பயிலும் தமிழாலய மாணவர்களும் கலைத்திறன் போட்டியிற் பங்குபற்ற அனுமதிக்கப்படுவார்கள்.
- ஒவ்வொரு போட்டிக்கும் மூன்று நடுவர்கள் நியமிக்கப்படுவார்கள். அவர்கள் வேற்று மாநிலங்களிலிருந்து தெரிவு செய்யப்படுவார்கள்.
- போட்டியிடும் தமிழாலயங்கள் தாம் தனியாகவோ அல்லது அயல் தமிழாலயங்களுடனோ இணைந்து போட்டியிடலாம். அப்படி ஒன்றுக்கு மேற்பட்ட தமிழாலயங்கள் ஒருங்கிணைந்து போட்டி நிகழ்வை உருவாக்கினால், அதில் ஏதாவது ஒரு தமிழாலயத்தின் பெயரிலேயே விண்ணப்பித்தல் வேண்டும்.
- கலைத்திறன் போட்டிக்குத் தமிழாலயத்தின் கலைப்பிரிவுச் செயற்பாட்டாளரே ஒருங்கிணைப்புச் செயற்பாட்டாளராகச் செயலாற்ற வேண்டும். ஆனால், நிகழ்வுகளைப் பயிற்றுவதற்கும், அவை தொடர்பான உதவிகளுக்கும் தமிழாலயங்களின் பெற்றோர், ஆசிரியர் மற்றும் முன்னாள் மாணவர்களை ஒருங்கிணைத்துப் பயன்பெறலாம். போட்டிகளுக்குரிய மாணவர்களையும் அவற்றுடன் தொடர்புடைய செயற்பாட்டாளர்களையும் அழைத்து வருவதற்கான முழுமையான செயற்பாடுகளை அந்தந்தத் தமிழாலய நிர்வாகியே பொறுப்பேற்பதுடன், இவ்விடயம் சார்பாக உங்கள் தமிழாலயக் கலைப்பிரிவின் செயற்பாட்டாளருக்கு முழுமையான ஆதரவையும் ஒத்துழைப்பையும் வழங்க வேண்டும்.
- விடுதலைப் பாடல்களைச் சுருக்கியோ அல்லது இணைத்து விரிவாக்கம் செய்தோ போட்டிகளுக்குப் பயன்படுத்துவதை முற்றாகத் தவிர்க்கவும். மேற்குறித்த விடயங்களைக் கடைப்பிடிக்காத போட்டிகள் நிராகரிக்கப்படும் என்பதையும் அறியத்தருகின்றோம்.
- போட்டிகள் நிறைவுபெற்ற பின்னர் அரங்கிலே மதிப்பளிப்பினைப் பெறும் அனைத்துப் போட்டியாளர்களும் அரங்காற்றுகையின்போது அணிந்திருக்கும் உடை அல்லது சீருடையுடன் மட்டுமே மதிப்பளிப்பினைப் பெற அரங்கிற்கு வரவேண்டும்.

**போட்டியாளர்களுக்கான போட்டி விண்ணப்ப விதிகள்:**

- ஒரு மாணவர் இரு போட்டிகளில் மாத்திரமே பங்குபற்றலாம்.
- வாய்ப்பாட்டு மற்றும் விடுதலைப்பாடல் போன்ற இரு தனிப்போட்டிகளிலும் பங்குபற்றும் போட்டியாளர்களுக்குச் சிறப்பு வாய்ப்பாகக் குழுநிலைப் போட்டிகளில் ஒன்றான வில்லுப்பாட்டுப் போட்டியில் மட்டும் பங்குபற்றும் அனுமதி உள்ளது.

**தமிழாலயங்களுக்கான போட்டி விண்ணப்ப விதிகள்:**

தனியொருவருக்கான போட்டி:

- ஐம்பதுக்கு உட்பட்ட மாணவர்களைக் கொண்ட தமிழாலயங்கள் ஒரு போட்டிக்கு ஒருவரை போட்டிகளிற் பங்கேற்க விண்ணப்பிக்கலாம்.

- நூற்றுக்கு உட்பட்ட மாணவர்களைக் கொண்ட தமிழாலயங்கள் ஒரு போட்டிக்கு இருவரை போட்டிகளிற் பங்கேற்க விண்ணப்பிக்கலாம்.
- நூற்றுக்கு மேற்பட்ட மாணவர்களைக் கொண்ட தமிழாலயங்கள் ஒரு போட்டிக்கு மூவரை போட்டிகளிற் பங்கேற்க விண்ணப்பிக்கலாம்.
- தமிழாலய மட்டத்தில் தெரிவுப்போட்டிகள் நடாத்தப்பட்டுப் போட்டியாளரைத் தெரிவுசெய்தல் வேண்டும். அத்தெரிவுப் போட்டியினைத் தனியொருவர் நடுவம் செய்யாது, குழுநிலையில் துறைசார் வல்லுநர்களினால் நடுவம் செய்யப்பட வேண்டும்.

குழுப் போட்டி:

- ஒவ்வொரு போட்டியிலும் தமிழாலயங்களிலிருந்து ஒரு குழு மாத்திரமே பங்குபற்றலாம்.

**போட்டிகளின் ஒழுங்குகள்:**

**1. மயிலாட்டம்**

இந்த நடனத்திற்குப் போட்டியாளர்கள் மயிலின் வடிவத்தை ஒத்திருக்கும் வகையில் மயிலின் தோற்றத்தைப்போல உருவகப்படுத்தி ஆடவேண்டும். இது ஒரு தமிழர் நாட்டார் ஆடற்கலை வடிவமாகும்.

| | |
|---|---|
| **வயதெல்லை:** | 6 - 15 அகவை |
| **போட்டியாளர்கள் எண்ணிக்கை:** | 5 - 8 மாணவர்கள் |
| **பால்:** | பெண்கள் |
| **பாடலுக்கான நேர எல்லை:** | 5 - 7 மணித்துளிகள் |
| **பாடல் தெரிவு:** | வடஇந்திய இசை(கிந்துஸ்தானி), மேற்கத்தைய இசை, திரையிசை, கிருஸ்ணன் மற்றும் கண்ணன் பாடல்கள் மற்றும் இசை போன்றன **தவிர்க்கப்பட வேண்டும்**. மயில் சார்ந்த பாடல்களை அல்லது இசையைத் தெரிவுசெய்ய வேண்டும். |

**புள்ளிக் கணிப்பு:**

| | |
|---|---|
| குழுநிலை ஆடல் வெளிப்பாடு | 30 புள்ளிகள் |
| நடன ஆக்கம் | 20 புள்ளிகள் |
| பாடல் தெரிவு | 10 புள்ளிகள் |
| ஒப்பனை | 20 புள்ளிகள் |
| ஆற்றுகை வெளிப்பாடு | 10 புள்ளிகள் |
| நேரம் | 10 புள்ளிகள் |

**2. காவடியாட்டம்**

காவடியாட்டமானது காவடியைப் பயன்படுத்தி ஆடப்படும் ஆட்டமாகும். ஆலயங்களில் ஆடப்படும் கலைவடிவமாக உள்ள இந்த நடனம் ஒரு தமிழர் நாட்டார் ஆடற்கலை வடிவமாகும்.

| | |
|---|---|
| **வயதெல்லை:** | 6 - 15 அகவை |
| **போட்டியாளர்கள் எண்ணிக்கை:** | 5 - 8 மாணவர்கள் |
| **பால்:** | ஆண்கள் |
| **பாடலுக்கான நேர எல்லை:** | 5 - 7 மணித்துளிகள் |
| **பாடல் தெரிவு:** | கிராமியப் பாடல்களாக அமைதல் வேண்டும். தாயகப் பாடல்களாயின் விரும்பத்தக்கது. **திரையிசைப்** பாடல்களைத் தெரிவுசெய்வதை முழுமையாகத் தவிர்த்தல் வேண்டும். |

**புள்ளிக் கணிப்பு:**

| | |
|---|---|
| குழுநிலை ஆடல் வெளிப்பாடு | 30 புள்ளிகள் |
| நடன ஆக்கம் | 20 புள்ளிகள் |
| பாடல் தெரிவு | 10 புள்ளிகள் |
| ஒப்பனை | 15 புள்ளிகள் |
| ஆற்றுகை வெளிப்பாடு | 15 புள்ளிகள் |
| நேரம் | 10 புள்ளிகள் |

**3. புலியாட்டம்**

புலியின் தோற்றத்தையும் இயல்பையும் பிரதிபலிக்கும் வகையில் ஆடப்படும் ஒரு குழுநிலைக் கிராமிய ஆடல் நிகழ்வாகும்.

| | |
|---|---|
| **வயதெல்லை:** | 16 - 21 |
| **போட்டியாளர்கள் எண்ணிக்கை:** | 5 - 8 மாணவர்கள் |
| **பால்:** | ஆண்கள் |
| **பாடலுக்கான நேர எல்லை:** | 5 - 7 மணித்துளிகள் |
| **பாடல் தெரிவு:** | விடுதலைப் பாடல் அல்லது கிராமியப் பாடலைப் பயன்படுத்தி அன்பு, அறம், வீரம் ஆகிய முப்பண்புகளை உள்ளடக்கியதாக நடன ஆற்றுகை அமைதல் வேண்டும். |

**புள்ளிக் கணிப்பு:**

| | |
|---|---|
| குழுநிலை ஆடல் வெளிப்பாடு | 30 புள்ளிகள் |
| நடன ஆக்கம் | 20 புள்ளிகள் |
| பாடல் தெரிவு | 10 புள்ளிகள் |
| ஒப்பனை | 20 புள்ளிகள் |
| ஆற்றுகை வெளிப்பாடு | 10 புள்ளிகள் |
| நேரம் | 10 புள்ளிகள் |

**4. காவடி, கரகம், பொய்க்காற் குதிரை**

செம்பு அல்லது பித்தளைக் குடத்தைத் தலையில் வைத்தபடி சமநிலைபேணி ஆடப்படும் ஆட்டம் கரகாட்டம். கழக இலக்கியங்களில் இதனைக் குடக்கூத்து எனவும் சுட்டப்பட்டுள்ளது. காவடியாட்டமானது காவடியைப் பயன்படுத்தி ஆடப்படும் ஆட்டமாகும். குதிரைக்கூட்டை அணிந்து

கொண்டு குதிரையைப்போன்ற தோற்ற வெளிப்பாட்டைப் பிரதிபலித்தவாறு மரக்காலில் நின்றாடும் ஆட்டம் பொய்க்காற் குதிரை ஆட்டமாகும்.

| | |
|---|---|
| **வயதெல்லை:** | 8 - 21 அகவை |
| **போட்டியாளர்கள் எண்ணிக்கை:** | 10 - 12 மாணவர்கள் (குறைந்தது நான்கு ஆண்களும் நான்கு பெண்களும் பங்கேற்க வேண்டும்.) |
| **பாடலுக்கான நேர எல்லை:** | 6 - 8 மணித்துளிகள் |
| **பாடல் தெரிவு:** | தாயகப் பாடல்களைத் தெரிவுசெய்து பயன்படுத்த வேண்டும். |

**புள்ளிக் கணிப்பு:**

| | |
|---|---|
| குழுநிலை ஆடல் வெளிப்பாடு | 30 புள்ளிகள் |
| கிராமிய வடிவ நடன ஆக்கம் | 20 புள்ளிகள் |
| கரக ஆற்றுகை | 10 புள்ளிகள் |
| பாடல் தெரிவு | 10 புள்ளிகள் |
| ஒப்பனை | 10 புள்ளிகள் |
| ஆற்றுகை வெளிப்பாடு | 10 புள்ளிகள் |
| நேரம் | 10 புள்ளிகள் |

## 5. பரதநாட்டியம்

| பிரிவு | கீழ்ப்பிரிவு | மேற்பிரிவு |
|---|---|---|
| **வயதெல்லை:** | 6 - 15 அகவை | 16 அகவைக்கு மேற்பட்டோர் |
| **போட்டியாளர்கள் எண்ணிக்கை:** | 5 - 8 மாணவர்கள் | 5 - 8 மாணவர்கள் |
| **உருப்படிக்கான நேர எல்லை:** | 5 - 6 மணித்துளிகள் | 10 - 12 மணித்துளிகள் |
| **உருப்படி:** | முருக கௌத்துவம் - தமிழ் | சிவ கீர்த்தனை - தமிழ் |

**புள்ளிக் கணிப்பு**

| | |
|---|---|
| தாளம் | 20 புள்ளிகள் |
| பாவம் | 15 புள்ளிகள் |
| அங்கசுத்தம் | 15 புள்ளிகள் |
| நடன அமைப்பு | 20 புள்ளிகள் |
| ஆற்றுகை வெளிப்பாடு | 20 புள்ளிகள் |
| நேரம் | 10 புள்ளிகள் |

6. **வாய்ப்பாட்டு**

| பிரிவு | வயதெல்லை | பாடலுக்கான நேர எல்லை | பாடல் தெரிவு |
|---|---|---|---|
| கீழ்ப்பிரிவு | 6 - 10 அகவை | 4 - 6 மணித்துளிகள் | நாட்டார் பாடல்களில் ஒன்றைத் தெரிவுசெய்து பாடவேண்டும். |
| மத்தியபிரிவு | 11 - 15 அகவை | 4 - 6 மணித்துளிகள் | திருப்புகழ் பதிகங்களில் ஒன்றைத் தெரிவுசெய்து பாடவேண்டும். |
| மேற்பிரிவு | 16 - 21 அகவை | 10 - 12 மணித்துளிகள் | தமிழ்த் தில்லானாவைத் தெரிவுசெய்து பாடவேண்டும். |

**புள்ளிக் கணிப்பு:**

| | |
|---|---|
| சுருதி | 15 புள்ளிகள் |
| லயம் | 15 புள்ளிகள் |
| உச்சரிப்பு | 10 புள்ளிகள் |
| மனனம் | 20 புள்ளிகள் |
| ராகம் ஒத்திசைவு | 10 புள்ளிகள் |
| குரல்வளம் | 10 புள்ளிகள் |
| ஆற்றுகை வெளிப்பாடு | 10 புள்ளிகள் |
| நேரம் | 10 புள்ளிகள் |

7. **விடுதலை நடனம்**

**அ) நுண்கலை பயிலாத மாணவர்களுக்கான குழுநிலைப்போட்டி**

| | |
|---|---|
| **வயதெல்லை:** | 6 - 21 அகவை |
| **போட்டியாளர்கள் எண்ணிக்கை:** | 5 - 8 மாணவர்கள் |
| **பாடலுக்கான நேர எல்லை:** | 6 - 8 மணித்துளிகள் |
| **பாடல் தெரிவு:** | விடுதலைப் பாடல்களை மட்டுமே தெரிவுசெய்தல் வேண்டும். |

இப்போட்டியில் பரதநாட்டிய அடவுகளையோ மற்றும் முத்திரைகளையோ பயன்படுத்துவதை முழுமையாகத் தவிர்க்கவேண்டும். நுண்கலை பயிலாத மாணவர்கள் மட்டுமே இப்போட்டியில் பங்குபற்ற இணைக்கப்படல் வேண்டும். இதனைத் தமிழாலய நிர்வாகங்கள் கவனத்தில் எடுப்பதோடு, விதிமீறலில் ஈடுபடும் போட்டிகள் நிராகரிக்கப்படும் என்பதைக் கருத்திற்கொண்டு அணியம் செய்யவும்.

**புள்ளிக் கணிப்பு:**

| | |
|---|---|
| குழுநிலை ஆடல் வெளிப்பாடு | 20 புள்ளிகள் |
| நடன ஆக்கம் | 20 புள்ளிகள் |
| பாடல் தெரிவு | 10 புள்ளிகள் |
| ஒப்பனை | 10 புள்ளிகள் |
| ஆற்றுகை வெளிப்பாடு | 20 புள்ளிகள் |
| பாவம் | 10 புள்ளிகள் |
| நேரம் | 10 புள்ளிகள் |

**ஆ) விடுதலை நடனம் - நுண்கலை பயிலும் மாணவர்களுக்கான குழுநிலைப்போட்டி**

| | |
|---|---|
| **வயதெல்லை:** | 6 - 21 அகவை |
| **போட்டியாளர்கள் எண்ணிக்கை:** | 5 - 8 மாணவர்கள் |
| **பாடலுக்கான நேர எல்லை:** | 6 - 8 மணித்துளிகள் |
| **பாடல் தெரிவு:** | விடுதலைப் பாடல்களை மட்டுமே தெரிவுசெய்தல் வேண்டும். |

**புள்ளிக் கணிப்பு:**

| | |
|---|---|
| பாடல் தெரிவு | 10 புள்ளிகள் |
| பாவம் | 10 புள்ளிகள் |
| தாளம் | 20 புள்ளிகள் |
| அங்கசுத்தம் | 10 புள்ளிகள் |
| புதுமை வெளிப்பாடு | 10 புள்ளிகள் |
| கற்பனைத்திறன் | 10 புள்ளிகள் |
| ஆற்றுகை வெளிப்பாடு | 20 புள்ளிகள் |
| நேரம் | 10 புள்ளிகள் |

## 8. விடுதலைப் பாடல்

| பிரிவு | வயதெல்லை | பாடலுக்கான நேர எல்லை | பாடல் தெரிவு |
|---|---|---|---|
| கீழ்ப்பிரிவு | 6 - 10 அகவை | 5 - 7 மணித்துளிகள் | விடுதலைப் பாடல் |
| மத்தியபிரிவு | 11 - 15 அகவை | 6 - 8 மணித்துளிகள் | விடுதலைப் பாடல் |
| மேற்பிரிவு | 16 - 21 அகவை | 6 - 8 மணித்துளிகள் | விடுதலைப் பாடல் |

**புள்ளிக் கணிப்பு:**

| | |
|---|---|
| சுருதி | 20 புள்ளிகள் |
| லயம் | 20 புள்ளிகள் |
| உச்சரிப்பு | 10 புள்ளிகள் |
| மனனம் | 20 புள்ளிகள் |
| ராகம் ஒத்திசைவு | 10 புள்ளிகள் |
| குரல்வளம் | 10 புள்ளிகள் |
| ஆற்றுகை வெளிப்பாடு | 10 புள்ளிகள் |

## 9. வில்லுப்பாட்டு (15 - 20 நிமிடங்கள்)

தமிழர் கலைவடிவங்களில் ஒன்றான வில்லுப்பாட்டு அல்லது வில்லிசை, இது வில்லின் துணைகொண்டு இசைக்கப்படுவதாகும். துணைக் கருவிகளாக உடுக்கை, குடம், தாளம் என்பன பயன்படுத்தப்பட வேண்டும். கைவிடப்பட்டுக் கவனிப்பாரற்ற நிலைக்குச் சென்றுவிட்ட எமது பாரம்பரியக் கலைவடிவங்களில் ஒன்றாக இருக்கும் வில்லுப்பாட்டு, தமிழாலயச் சிறார்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். எமது நோக்கத்தைப் புரிந்து கொண்டு தமிழாலயங்கள் முழுமையான ஒத்திசைவோடு போட்டிகளிற் பங்கேற்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**வில்லுப்பாட்டுக்கான தலைப்பு: தனிநாயகம் அடிகளாரின் தமிழ்த்தொண்டு**

**புள்ளிக் கணிப்பு:**

| | |
|---|---|
| கதைக்கரு | 20 புள்ளிகள் |
| ஒத்திசைவான ஓசையுடன் பாடும் திறன் | 20 புள்ளிகள் |
| கதைசொல்லும் திறன் | 15 புள்ளிகள் |
| குரல் வளமும் ஒத்திசைவும் | 15 புள்ளிகள் |
| அரங்காற்றுகை | 10 புள்ளிகள் |
| கூட்டிணைந்த குழுச் செயற்பாட்டிசைவு | 10 புள்ளிகள் |
| நேரம் | 10 புள்ளிகள் |

**கலைத்திறன் போட்டிக்கான கட்டணம்:**

கலைத்திறன் போட்டியினால் எமக்கு ஏற்படவுள்ள செலவுகளின் ஒரு பகுதியை நிவர்த்தி செய்வதற்காகப் பங்கேற்புக் கட்டணம் வழமைபோன்று பெற்றுக்கொள்ளப்படும். அதன் விபரத்தைக் கீழே நிரற்படுத்தியுள்ளோம்.

| | |
|---|---|
| மயிலாட்டம் | 25,00 € |
| காவடியாட்டம் | 25,00 € |
| புலியாட்டம் | 25,00 € |
| காவடி, கரகம், பொய்க்காற்குதிரை | 25,00 € |
| பரதநாட்டியம் | 25,00 € |
| வாய்ப்பாட்டு | 10,00 € |
| விடுதலை நடனம் | 25,00 € |
| விடுதலைப் பாடல் | 10,00 € |
| வில்லுப்பாட்டு | 25,00 € |

போட்டியில் பங்கேற்கும் தமிழாலயங்களுக்கான விண்ணப்பப் படிவம் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. அதில் பங்கேற்க விரும்பும் போட்டிக்கு நேரேயுள்ள பெட்டியினுள் புள்ளடியிட்டு விண்ணப்பத்தை முழுமையாக நிரப்பி 15.12.2024ஆம் நாளுக்கு முன்னர் உங்கள் **மாநிலத்திற்குரிய கலைப்பிரிவுச் செயற்பாட்டாளருக்கும் மற்றும் கலைப்பிரிவுக்கும்** (kunst@tbvgermany.com) மின்னஞ்சல் வாயிலாக அனுப்பி வைக்கவேண்டும். மேற்குறித்த நாளுக்குப் பின்னர் வரும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது என்பதைக் கவனத்திற்கொண்டு செயற்பட்டு முன்னாயத்தப் பணிகளுக்குத் துணைபுரியவும்.

அன்பான நிர்வாகிகளே!

கலைத்திறன் போட்டி 2025 நடைபெறவுள்ளது. எனவே நீங்கள் எம்மோடு ஒருங்கிணைந்து கைகோர்த்துச் செயற்பட வேண்டுகின்றோம். இச்சுற்றறிக்கை கிடைத்தவுடன் இதன் **பிரதியை** முதலில் உங்கள் தமிழாலயத்தின் கலைப்பிரிவின் செயற்பாட்டாளருக்கும், நகரச் செயற்பாட்டாளருக்கும் மற்றும் ஆசிரியர்களுக்கும் வழங்குவதுடன் எமது நோக்கம் பற்றியும் விரிவாகக் கலந்துரையாடுங்கள். அதன் அடுத்த கட்டமாக இச்சுற்றறிக்கையின் 9 பக்கங்களோடு, இணைக்கப்பட்டுள்ள வயதுக்கணிப்பு அட்டவணை உட்பட அனைத்தையும் பிரதிசெய்து, உங்களின் பெற்றோர்கள் அனைவருக்கும் வழங்கி, அவர்களின் ஒத்துழைப்பையும் முழுமையாகப் பெற்று உறுதியோடு செயலாற்றுமாறு உரிமையுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

**குறிப்பு:** கலைத்திறன் போட்டி 2025 நிகழ்வுகளுக்குத் தேவையான பாடல்களோ, ஒப்பனைப் பொருட்களோ, கலைப்பொருட்களோ மற்றும் பின்னணி இசையோ தமிழ்க் கல்விக் கழகத்தினால் தந்துதவ முடியாது. ஆகவே அவற்றைக் கருத்திற்கொண்டு நீங்களே தயார் செய்துகொள்ளவும். போட்டி நிகழ்வுகளில் இடம்பெறும் விடுதலைப் பாடலுக்கான நடனங்கள் தேவையேற்படின் தமிழ்க் கல்விக் கழகத்தின் 35ஆவது அகவை நிறைவு விழாவிற்குத் தெரிவு செய்யப்படும்.

மாநிலங்களுக்கான கலைத்திறன் போட்டியை ஒருங்கிணைத்து நடாத்தும் பொறுப்பை, தமிழ்க் கல்விக் கழகத்தின் கலைப்பிரிவின் மாநிலச் செயற்பாட்டாளரிடம் ஒப்படைத்துள்ளோம். அவரின் செயற்பாடுகளுக்கு முழுமையான ஆதரவை வழங்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

கலைப்பிரிவின் மாநிலக் கலைப்பிரிவுச் செயற்பாட்டாளர்களின் நிரல்.

| **முழுப்பெயர்** | **மாநிலம்** | **தொடர்பு எண்** |
|---|---|---|
| திருமதி கருணைறாஜி பிரபாகரன் | வடமாநிலம் | 0163 - 34 55 462 |
| திருமதி சாரதா இராஜ்குமார் | வடமத்திய மாநிலம் | 0176 - 64 67 78 15 |
| திருமதி சுபாசினி சடகோபன் | மத்திய மாநிலம் | 0157 - 38 18 82 00 |
| திருமதி இராசராணி ஸ்ரீவிக்னேஸ்வரமூர்த்தி | தென்மேற்கு மாநிலம் | 0178 - 51 40 22 0 |
| திருமதி பகீரதி ஆனந்தசிங்கம் | தென்மாநிலம் | 0176 - 47 17 88 11 |

நன்றி

30/10/2024

செ.லோகானந்தம் (லோகன்)
பொறுப்பாளர்

மார்க்கண்டு பாஸ்கரமூர்த்தி
கலைப்பிரிவுப் பொறுப்பாளர்

# கலைத்திறன் போட்டி 2025

## போட்டிகளுக்கான வயதெல்லைக் கணிப்பு அட்டவணை

| போட்டி | வயதுப்பிரிவு | பிறந்த நாள் முதல் | பிறந்த நாள் வரை |
|---|---|---|---|
| மயிலாட்டம்<br>காவடியாட்டம் | 6 – 14 | 01.01.2011 | 31.12.2019 |
| புலியாட்டம் | 10 – 16 | 01.01.2009 | 31.12.2015 |
| காவடி, கரகம், பொய்க்காற்குதிரை | 8 – 21 | 01.01.2004 | 31.12.2017 |
| பரதநாட்டியம் | கீழ்ப்பிரிவு 6 – 15 | 01.01.2010 | 31.12.2019 |
| | மேற்பிரிவு 16+ | 31.12.2009 | |
| வாய்ப்பாட்டு<br>விடுதலைப் பாடல் | கீழ்ப்பிரிவு 6 – 10 | 01.01.2015 | 31.12.2019 |
| | மத்திய பிரிவு 11 – 15 | 01.01.2010 | 31.12.2014 |
| | மேற்பிரிவு 16 – 21 | 01.01.2004 | 31.12.2009 |
| விடுதலை நடனம் | 6 – 21 | 01.01.2004 | 31.12.2019 |

# கலைத்திறன் போட்டி 2025 - விண்ணப்பப் படிவம்

(விண்ணப்ப நிறைவு நாள் 15.12.2024)

ஒரு போட்டிக்கு ஒரு படிவத்தை மாத்திரம் பயன்படுத்த வேண்டும்.

போட்டியில் பங்குபற்றும் தமிழாலயம்: ____________________

பங்குபற்றும் போட்டிகளின் விபரம்:

☐ தனிப்போட்டி ☐ குழுப்போட்டி

| | | |
|---|---|---|
| ☐ வாய்ப்பாட்டு - கீழ்ப்பிரிவு<br>☐ வாய்ப்பாட்டு - மத்திய பிரிவு<br>☐ வாய்ப்பாட்டு - மேற்பிரிவு<br>☐ விடுதலைப் பாடல் - கீழ்ப்பிரிவு<br>☐ விடுதலைப் பாடல் - மத்திய பிரிவு<br>☐ விடுதலைப் பாடல் - மேற்பிரிவு | ☐ மயிலாட்டம்<br>☐ காவடியாட்டம்<br>☐ புலியாட்டம்<br>☐ காவடி,கரகம்,பொய்க்காற்குதிரை<br>☐ வில்லுப்பாட்டு | ☐ பரதநாட்டியம் - கீழ்ப்பிரிவு<br>☐ பரதநாட்டியம் - மேற்பிரிவு<br>☐ விடுதலை நடனம் - நுண்கலை<br>☐ விடுதலை நடனம் - தமிழாலயம் |

போட்டியில் தனியாகவா அல்லது வேறு தமிழாலயங்களுடன் இணைந்து போட்டியிடுகின்றீர்களா?

☐ தனியாக. ☐ இணைந்து.

விண்ணப்பித்த போட்டிக்கான தொடர்பாளரின் பெயரும், அவரின் தொலைபேசி எண்ணும்:

| |
|---|
| |

| இல. | மாணவரின் முழுப் பெயர் | பிறந்த திகதி | சுட்டெண் | இணையும் தமிழாலயம் |
|---|---|---|---|---|
| 1 | | | | |
| 2 | | | | |
| 3 | | | | |
| 4 | | | | |
| 5 | | | | |
| 6 | | | | |
| 7 | | | | |
| 8 | | | | |
| 9 | | | | |
| 10 | | | | |
| 11 | | | | |
| 12 | | | | |

மேலே குறிப்பிட்ட விடயங்கள் யாவும் சரியானவை என்பதை உறுதி செய்து இப்படிவத்தில் குறிப்பிட்ட போட்டிக்கு விண்ணப்பிக்கின்றோம்.

____________________ ____________________

நிர்வாகி கலைப்பிரிவுச் செயற்பாட்டாளர்